**தலைப்பு 2 – பிரதம அமைச்சர் அலுவலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 2 - பிரதம அமைச்சர் அலுவலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 28 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அலுவலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 29 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதம அமைச்சர் அலுவலகத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 செலவின விடயங்களிற்கு ரூபா 72,000,000 கூட்டுமொத்தமான மேலதிக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததால் நிதியேற்பாடுகளில் ரூபா 58,960,867 கூட்டுமொத்த தொகைகள் மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 13,039,133 கூட்டுமொத்தமான நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. அந்த சேமிப்புக்கள் ஒவ்வொரு செலவின விடயத்திற்கும் மேற்கொள்ளப்பட்ட தேறிய நிதியேற்பாட்டில் 17 சதவீதம் முதல் 54 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டன. | நாட்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக திட்டமிட்டவாறு பணிகளை பூர்த்தி செய்வதில் உள்ள சிரமங்கள், வெளிநாட்டு சுற்றுப்பயணங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் பதவியணியினர் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்த இயலாமை போன்ற காரணங்களால், நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டுள்ளன. | நி.பி. 50 இன் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடுகள் சரியாகவும் யதார்த்தமாகவும் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திறைசேரி கணனி அச்சீட்டுத் தாள்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதம அமைச்சர் அலுவலகத்திற்குரிய ரூபா 20,691,587 பொறுப்புக்கள் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் அந்த பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ள கடப்பபாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இது 2021 ஆம் ஆண்டுக்கு முன்னர் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கீழ் இயங்கி வந்த உப அலுவலகமொன்றான ஒருங்கிணைக்கும் நல்லிணக்க பொறிமுறைகளுக்கான செயலகத்துடன் (SCRM) தொடர்புடையது என்பதால், 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து வழங்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அது சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்கள் கூற்றில் அனைத்து பொறுப்புக்களும் சேர்க்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

(அ) அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படும் தேசிய பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதை முன்னுரிமைப் பணியாக இனங்கண்டு அதற்கிணங்க பிராந்திய ரீதியாக வழங்கப்படும் சேவைகள் மற்றும் அவற்றின் நோக்கெல்லைகளின் தொடர்பைக் கருத்தில் கொள்ளும் போது இராஜாங்க அமைச்சுக்கள் மற்றும் அமைச்சரவையின் தெரிவுசெய்யப்பட்ட அமைச்சுக்களின் ஒருங்கிணைப்பின் கீழ் பின்வரும் 04 குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன.

- சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்திக் குழு
- வாழ்வாதார அபிவிருத்திக் குழு
- உள்ளூர் உற்பத்தித் தொழில் அபிவிருத்திக் குழு
- கிராமப்புற உட்கட்டமைப்பு அபிவிருத்திக் குழு

ஆரம்ப கட்டமாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை ஒவ்வொரு குழுவும் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக நடாத்துவதற்கும், அந்தக் குழுக்களில் எழுப்பப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ஒவ்வொரு மாவட்டத்திலும் நடாத்தப்பட்ட கூட்டங்களில் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட மொத்த பிரச்சினைகளின் எண்ணிக்கை 2,562 ஆகும். உரிய கூட்டங்களின் போது இருநூற்று எண்பத்தாறு பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளில் 2,276 இன்னமும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.<br>சிக்கல்களை தீர்க்கும் முன்னேற்றம் செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்படப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. | ஆகக்கூடிய செயலாற்றலை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | இந் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக பிராந்திய மட்டத்தில் பொருத்தமான பிரச்சனைகளை இனங்கண்டு ஒருங்கிணைந்த அபிவிருத்திப் பொறிமுறையை உருவாக்கி அதன் மூலம் தேசிய அபிவிருத்தி இலக்குகளை அடைவதே எதிர்பார்ப்பாகும். அதன் பிரகாரம் அதிக செலவினத்தை மேற்கொண்டு மாவட்டக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிரந்த போதிலும், கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக அமுல்படுத்தப்பட வேண்டிய | 2022 இன் பாதீட்டின் மூலம் நிதியேற்பாடுகளை ஒதுக்குவதற்கான அடிப்படையாக இந்தத் தகவல் கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. | ஆகக்கூடிய செயலாற்றலை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் முன்மொழிவுகள் எதுவும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை அல்லது அதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் எதுவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) நவீன சந்தை மற்றும் தொழில்நுட்பத்தில் கவனம் செலுத்தும் போது இளைஞர்கள் மத்தியில் வறுமையை ஒழிப்பதற்கும் இளைஞர் சமூகத்தை வலுவூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் முறையான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு 2021 ஏப்ரலில் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. செயற்திட்ட அமலாக்கல் அறிக்கைகள், செயற்திட்டத்திற்கான நிதியேற்பாடுகள் செய்யப்படும் விதம், தேவையான அளவு நிதியேற்பாடுகள், முழு செயற்திட்டத்தையும் உள்ளடக்கும் செயற்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பித்தல், செயற்திட்டத்தை திட்டமிடுதல், அமுல்ப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் போன்ற விடயங்களைக் கொண்டதாக தயாரிக்கப்பட வேண்டியதுடன் அதற்கான அங்கீகாரத்தை பெற்று செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2022 மே 31 வரையிலும் இந்த அறிக்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | ஒரு குறிப்பிட்ட திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பிரதம அமைச்சர் அலுவலகத்திற்காக ஏனைய நிறுவனங்களால் வழங்கப்பட்ட 11 வாகனங்கள் உரிய முறையில் அலுவலகத்தால் கையகப்படுத்தப்படவில்லை. | ஏழு வாகனங்கள் பிரதம அமைச்சர் அலுவலக போக்குவரத்துக் குழாத்திலும், அலரிமாளிகை வளாகத்திலும், 02 வாகனங்கள் அமைச்சர் பாதுகாப்புப் பிரிவிலும், 5வது | வாகனங்களை முறையாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நிறைவேற்று ஜனாதிபதியின் போக்குவரத்துக் குழாத்திலும், ஒரு வாகனம் முன்னாள் பிரதமரின் தனிப்பட்ட பதவியணியினரிடமும், மீதமுள்ள வாகனம் பழுதுபார்ப்பதற்காக கராச்சிலும் உள்ளது. | |
| (ஆ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 11.1 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வின் பின்னர் படிவம் பொது 47 இன் கீழ் சமர்ப்பிக்கப்படும் பயன்படுத்த முடியாத பொருட்கள் ஒவ்வொரு நிதியாண்டினதும் ஏப்ரல் 30 இற்கு முன்னர் உரிய முறையில் கையாளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். எனினும், மீளாய்வாண்டிற்குரிய 905 பயன்படுத்த முடியாத பொருட்களுக்கான நடவடிக்கைகள் 2022 மே 30 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான எரிபொருளின் தட்டுப்பாடு காரணமாக, குறிப்பிட்ட காலப்பகுதியில் அகற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வது கடினமாக காணப்பட்டது. | பயன்படுத்த முடியாத பொருட்களுக்கு முறையாக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. மனித வளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அலுவலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 104 வெற்றிடங்கள் இருந்தன, அந்த வெற்றிடங்களில், 13 சிரேஷ்ட நிலை பதவிகள் வெற்றிடமாகவே உள்ளன. | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக, பிரதம அமைச்சர் அலுவலகத்தில் உள்ள பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடைமுறைப்படுத்தப்பட்ட சாதாரண நடைமுறையின் கீழ் உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்வதில் நடைமுறைச் சிக்கல்கள் எழுந்தன. எனவே 2021 ஆம் ஆண்டில் பதவியணி வெற்றிடங்களை நிரப்ப முடியவில்லை. | அலுவலகச் செயலாற்றலை பாதகமாக பாதிக்கும் பதவியணி வெற்றிடங்கள் காணப்படும் பட்சத்தில், வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) பிரதம அமைச்சர் அலுவலகததிற்கு இணைக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் வேறொரு நிறுவனத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் பிரதம அமைச்சர் அலுவலகம் 2021 ஆம் ஆண்டில் அந்த உத்தியோகத்தரிற்கு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 573,248 தொகையை செலுத்தியுள்ளது. | வெகுசன ஊடக அமைச்சின் கோரிக்கைக்கு அமைய குறித்த உத்தியோகத்தர் தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ளார். | தற்போது பணிபுரியும் இடத்தில் இருந்து சம்பளம் மற்றும் படிகளைப் பெறக்கூடியவாறு உத்தியோகத்தர்கள் முறையாக விடுவிக்கப்பட வேண்டும். |